ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2394/51 - 2024 ජූලි මස 26 වැනි සිකුරාදා - 2024.07.26

*2394/51 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சனாதிபதித் தேர்தல் - 2024**

***1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்***

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

சனாதிபதியின் பதவிக்காலம் 2024, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி முடிவுறுகின்றமையினாலும்,

பதவி வகிக்கும் சனாதிபதியின் பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னரான ஒரு மாதத்திற்குக் குறையாத மற்றும் இரண்டு மாதங்களுக்கு மேற்படாததுமான காலப் பகுதிக்குள் சனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட வேண்டுமென அரசியலமைப்பின் 31 ஆவது உறுப்புரையின் (3) ஆவது உப உறுப்புரை ஊடாக தேவைப்படுத்தப்பட்டிருப்பதனாலும்,

அரசியலமைப்பின் 104ஆ ஆவது உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்படுகின்ற, 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவினூடாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கிணங்க;

I. 2024, ஓகத்து மாதம் 15 ஆந் திகதி சனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர்களை பெயர்குறித்து நியமிக்கும் திகதியாகவும் ;

II. தேர்தல் ஆணைக்குழு அலுவலகம், சரண மாவத்தை, இராஜகிரிய, அந்த தேர்தலுக்கான வேட்பாளர்களை பெயர்குறித்து நியமிப்பதற்கான இடமாகவும் ;

III. 2024, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதியை அந்தத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நடாத்தப்படும் திகதியாகவும்,

இந்தக் கட்டளை ஊடாக நிர்ணயிக்கின்றோம்.

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம். ஏ. பீ. சீ. பெரேரா,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**ஏ. சண்முகநாதன்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

பேராசிரியர் **லக்ஷ்மன் திசாநாயக்க,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2024, யூலை 26.

1A - G 42317 — 604 (2024/07)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*